

# சிலப்பதிகாரம்

ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்றானது சிலப்பதிகாரம். மற்ற நூல்கள் போல் அல்லாமல், அதாவது அரசனையோ, தெய்வங்களையோ பாட்டுடைத் தலைவனாக கொள்ளாமல் குடிமக்களின் ஒருவரான கோவலனை பாட்டுடைத் தலைவனாகக் கொண்டதால் இதனை "குடிமக்கள் காப்பியம்" என்று கூறுவர்.

சிலப்பதிகாரம் என்னும் குடிமக்கள் காப்பியமானது இளங்கோவடிகளால் இயற்றப்பட்டது. இவர் புகழ்பெற்ற சேரமன்னன் செங்குட்டுவனுடைய தம்பி எனக் கருதப்படுகிறார்.

"சிலப்பதிகாரம்" என்ற சொல் சிலம்பு, அதிகாரம் என்ற இரு சொற்களால் ஆனது. சிலம்பு காரணமாக விளைந்த கதை என்பதால் சிலப்பதிகாரம் என அழைக்கப்படுகின்றது.

## நூல் உருவாக காரணமாக இருந்த வரலாறு:

மலைவளம் காண சென்ற இளங்கோவடிகள், சேரன் செங்குட்டுவன், சீத்தலைச்சாத்தனார் ஆகியோரிடம் அங்கு இருந்த மக்கள், ஒரு பெண் தெய்வத்தை நேரில் கண்டதாக கூறினார்கள். இதை கேட்டதும் யார் அந்த பெண் தெய்வம்? என்று சேரன் செங்குட்டுவன் வினவினார்.

அப்போது அங்கு இருந்த சீத்தலைச்சாத்தனார் அந்த பெண் தெய்வத்தின் கதை எனக்கு தெரியும் என்றும், அந்த பெண் தெய்வத்தின் கதையை பார் அறிந்து கொள்ளும் விதமாக இளங்கோவடிகள் எழுதவேண்டும் என்றும் கேட்டார். இளங்கோவடிகளும் சம்மதம் தெரிவிக்க அந்த பெண் தெய்வமான கண்ணகியின் முழு கதையையும் கூறினார்.

சீத்தலைச்சாத்தனார், இளங்கோவடிகளை "முதுகெலு வேந்தர் மூவர்க்கும் உரியது; அடிகள் நீரே அருளுக" என வேண்டிக்கொண்டார்.

இளங்கோவடிகளும், "நாடதும் யாமோர் பாட்டுடைச்செய்யுள்"எனக் கூறி சிலப்பதிகாரத்தை படைத்தார்.

**சிலப்பதிகாரம் கூறும் மூன்று உண்மைகள்:**

- » ஊழ்வினை உருத்துவந்து ஊட்டும்
- » அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும்
- » உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவர்

**சிலப்பதிகாரம் கதாபாத்திரங்களின் பெயர்கள்:**

- » கோவலனின் தந்தை மாசாத்துவான்
- » கண்ணகியின் தந்தை மாநாய்கன்
- » கோவலனின் தோழன் மாடலன்
- » கண்ணகியின் தோழி தேவந்தி
- » மாதவியின் தோழி சுதமதி, வயந்தமாலை
- » கோவலனுக்கும் மாதவிக்கும் பிறந்தவள் மணிமேகலை

**சிலப்பதிகாரத்தின் வேறு பெயர்கள்:**

- » தமிழின் முதல் காப்பியம்
- » உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள்
- » முத்தமிழ்க் காப்பியம்
- » முதன்மைக் காப்பியம்
- » பத்தினிக் காப்பியம்
- » நாடகப் காப்பியம்
- » குடிமக்கள் காப்பியம் (தெ.பொ.மீ)
- » புதுமைக் காப்பியம்
- » பொதுமைக் காப்பியம்
- » ஒற்றுமைக் காப்பியம்
- » ஒருமைப்பாட்டுக் காப்பியம்
- » தமிழ் தேசியக் காப்பியம்
- » மூவேந்தர் காப்பியம்
- » வரலாற்றுக் காப்பியம்

» போராட்டக் காப்பியம்

» புரட்சிக் காப்பியம்

» சிறப்பதிகாரம் (உ.வே.சா)

» பைந்தமிழ் காப்பியம்.

## குரவைக் கூத்து:

மலை வளமும், செல்வ வளமும், வீரமும் செறிந்து இருக்கக்கூடிய சோழ வம்சத்தில் பிறந்த மன்னர்களில் ஒருவர் தான் சேரன் செங்குட்டுவன்.

இயற்கை அழகையும், இயற்கை அன்னையின் வளர்ச்சியையும் பார்ப்பதற்காக, நாடாளும் அரசனான சேரன் செங்குட்டுவன் ஆட்சி பொறுப்புகளுக்கு இடையே கிடைக்கும் சிறு காலங்களில் மலை பகுதிகளுக்கு சென்று அங்குள்ள வளங்களை பார்த்து மனம் மகிழ்வார். எப்பொழுதும் போல அவர் மலையின் எழிலை ரசிப்பதற்காக பல மலைப் பகுதிக்கு சென்று வந்திருந்தார்.

அவ்விதம் சென்றிருந்த பொழுது ஒரு மலையின் அடிவாரத்தில் மலைவாழ் பெண்கள் அனைவரும் சேர்ந்து குரவைக் கூத்தை ஆடி கொண்டிருந்தார்கள். அந்தக் கூத்து நடைபெற்ற போது பாடப்பட்ட பாடலில் நகைச்சுவையும், வீரமும், விவேகமும் மற்றும் சொல்ல முடியாத அளவில் துயரமும், ஒரு பெண்ணின் உயர்வையும் குறித்த விதமாக பாடலானது அமைந்து இருந்தது.

அவர்கள் பாடிய அனைத்து பாடல்களிலும் ஒரு பெண்ணின் மீது அவர்கள் கொண்டிருக்கக்கூடிய மதிப்பும், பக்தியும் மற்றும் ஒருவிதமான மரியாதையும் அதில் அளவுக்கு அதிகமாகவே காணப்பட்டது. ஒரு பத்தினி பெண்ணின் வாழ்வை தழுவி அந்தப் பாடலானது அமைந்திருக்கின்றது என்று மன்னனுக்கு தெளிவாக புரிந்தது. பின்பு அவ்விடத்தில் இருந்து பல மலைகளை பார்வையிடுவதற்காக சென்றாலும் மலையின் அழகில் அவர் மனமானது லயம் கொள்ளவில்லை. மாறாக மலைவாழ் மக்களுடைய பாடலிலேயே அவருடைய முழு மனமும் லயித்துக் கொண்டிருந்தது.

## உண்மையா? இல்லை மாயையா?

பல்வேறு இடங்களுக்கு சென்று விட்டு எழில் அழகை ரசிக்க முடியாமலும், மனதில் இருந்த முடிச்சுகளை அவிழ்க்க முடியாமலும் மாயையின் பிடியில் அகப்பட்டுக் கொண்டிருந்தார். பயணத்தில் தன்னுடன் வந்த தன் மனைவி மற்றும் தன் உடன்பிறந்த சகோதரனான இளங்கோவுடன் ஓய்வெடுப்பதற்காக பேரியாற்றின் கரையில் ஒரு கூடாரம் அமைக்கப்பட்டு இருந்தது.

ஆனால் மன்னனுடைய மனம் சிறிதளவும் அமைதி கொள்ளவில்லை. மாறாக பலவிதமான குழப்பங்களுக்கும், கற்பனைகளுக்கும் இடையில் பலமாக மாட்டிக் கொண்டது.

யாராக இருக்கும்? இதுவரை கேள்விப்படாத பெண்ணாக இருக்கின்றதே! இது உண்மையில் ஒரு பெண்ணுடைய வாழ்க்கையா? அல்லது அவர்கள் உருவாக்கிய கற்பனை பெண்ணின் வாழ்க்கையா? என்று பல விதமான குழப்பங்களுக்கு மத்தியில்

*மன்னன் நன்றாக அகப்பட்டுக் கொண்டிருந்தார், உண்மை என்னவென்று அறிந்து கொள்வதற்காக...*

**சீத்தலைச்சாத்தனார் வருகை:**

*அப்பொழுது சற்றும் எதிர்பார்க்காமல் தமிழ் புலவரான சீத்தலைச்சாத்தனார் மன்னனை சந்திப்பதற்காக வந்திருந்தார். மன்னன் உள்ளே ஒருவர் வந்திருக்கின்றார் என்பதையும் மறந்து ஏதோ சிந்தனையில் மட்டும் ஆழ்ந்திருக்கின்றார் என்பதை வெளிப்படுத்தும் விதமாக அவருடைய தோற்றமானது இருந்தது. உள்ளே வந்திருந்த சீத்தலைச்சாத்தனார் சிறு வினாடிகள் அமைதி காத்திருந்தார். இருப்பினும் மன்னரிடம் எந்தவொரு அசைவுகளையும் அவரால் பார்க்க முடியவில்லை.*

*பின்பு சீத்தலைச்சாத்தனாரே மன்னரிடம் உரையாடத் துவங்கினார். நீண்ட நேரமாக மன்னர் ஏதோ சிந்தனையில் ஆழ்ந்திருப்பதாக தெரிகின்றதே! சிந்தனையில் ஆள்வது என்பது அமைச்சர்கள் மற்றும் புலவர்களுக்கு மட்டுமே உண்டான வேலை தானே. எங்கள் வேலையை மன்னர் எடுத்துக் கொண்டால் நாங்கள் எப்படி வாழ்வது? என்றார்.*

*மாயையில் இருந்து உண்மை உலகிற்கு வந்த மன்னரோ, ஏன் புலவர்கள் மட்டும் தான் சிந்திக்க வேண்டுமா? அரசர்கள் சிந்திக்க கூடாதா?*

*உடனே சீத்தலைச்சாத்தனார், நான் அப்படி எதுவும் சொல்ல வரவில்லை. அரசர்களும் சிந்திக்கலாம். எப்படி என்றால் அவர்களுடைய செயல்களை எப்படி செயல்படுத்துவது? என்று தானே.*

*மன்னர், புரியவில்லை புலவரே... நீங்கள் எதை கூற வருகின்றீர்கள் என்று?*

*அதாவது மன்னா! எதிரி நாட்டுப் படைகள் நம் நாட்டின் மீது படையெடுத்து வரும் பொழுது, அவர்களை எவ்விதம் வீழ்த்துவது என்று மன்னர் சிந்திக்க வேண்டும். அதை அவரிடம் இருக்கக்கூடிய கூரான ஆயுதங்களைக் கொண்டும், வீரர்களைக் கொண்டும் செயல்படுத்த வேண்டும். அதுதானே ஒரு மன்னரின் கடமையாகும் அல்லவா!*

*ஆனால் புலவரான எங்களிடம் இருப்பது என்னவோ, வெறும் எழுத்தாணியும், மூளையும் மட்டுமே! நாங்களும் களத்தில் இறங்கி எதிரி நாட்டு வீரர்களை வதம் செய்து, எங்களது தலையை நிமிர்த்தி நடக்க கூடியவர்கள் தான். இருந்தாலும் எங்கள் தலையை நிமிர்த்தி வைக்க மெய்யுடன் தலை கொண்ட இன்னொருவர் தேவைப்படுகிறார் அல்லவா!*

*என்னால் களத்தில் இறங்கி போரிட முடியும். ஆனால் உங்களிடத்தில் மொழிக் கொண்டு சண்டையிட தெரியாதே. புலவராயிற்றே எப்படியும் வெற்றியை உங்கள் பக்கம் தானே வைத்துக் கொள்வீர்கள் என்றார் மன்னர்.*

*மொழிச் சண்டை தெரியாது என்று கூறுகின்றீர்கள். ஆனால் எனக்கு நிகராகவே, நீங்களும் என்னிடத்தில் சண்டையிடுகின்றீர்களே மொழியினால்!*